**தலைப்பு - 235 சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு - 235 சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 06 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் நிதிக்கூற்றுக்கள் இணங்காமை

2022 திசெம்பர் 31 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அந்தத் தேவைப்பாடுகளிலிருந்து விலகிச் செல்லும் சில நிகழ்வுகள் காணப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 திசெம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல்கள் சுற்றறிக்கையின் 7.4 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் (ஏசிஏ-எவ்) திறைசேரிக்கான (உருப்படி ஈ) பணவனுப்பலானது அந்த ஆண்டிலும் ஆண்டின் இறுதியிலும் திறைசேரிக்கு மேற்கொள்ளப்பட்ட பணவனுப்பல்களை உள்ளடக்க வேண்டிய போதிலும் ஆண்டின் இறுதியளவில் திறைசேரிக்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த பணவனுப்பல் திறைசேரிக் காசுப் புத்தகத்தின் பிரகாரம் ரூபா 1,827,015 ஆக இருந்த போதிலும் திறைசேரிக்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த பணவனுப்பல் ரூபா 27,015 ஆக | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் 2022.05.05 இல் திணைக்களத்தில் ரூபா 2,310,000 தொகையை வைப்புச் செய்திருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வாய்மொழிமூல விசாரணைக்கு பதிலளித்த திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் தவறுதலாக திணைக்களத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். எனவே, அந்தத் தொகையிலிருந்து ரூபா 1,800,000 தொகையை திறைசேரிக்கு மீளளிக்குமாறும், ரூபா 510,000 தொகையை திணைக்களத்தின் கட்டுநிதிப் பெறுவனவுகளாக | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து தகவல்களைப் பெறுவதன் மூலம் நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டுள்ளதால் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 1,800,000 ஆல் குறைதத்துக் காட்டப்பட்டுள்ளது. | தக்கவைக்குமாறும் அவர் அறிவுறுத்தியிருந்தார். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 26,540,210 ஆக இருந்த போதிலும் 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல்களின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ஏசீஏ-6 நிதியல்லாத சொத்துக்களுக்காக நிதிக்கூற்றுக்களுடன் எஸ்ஏ 82 படிவம் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களம் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தைப் பயன்படுத்தாததால் நிதியல்லாத சொத்துக்களின் படிவத்தை இணைப்புக்களாக வழங்க முடியாதுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானமல்லாத பெறுவனவுகள்**

நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய வருமானமல்லாத பெறுவனவுகளுக்கான கணக்கீட்டின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திறைசேரி அச்சீட்டுத் தாள் எஸ்ஏ 70 இன் பிரகாரம் கட்டுநிதிப் பெறுவனவுகள் ரூபா 18,348,430 தொகையாக காணப்பட்ட போதிலும் இது ரூபா 16,548,43 ஆக குறிப்பிடப்பட்டுள்ளதால் நிதி செயலாற்றல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் ரூபா 1,800,000 குறைத்து காட்டப்பட்டுள்ளது. | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் 2022.05.05 இல் திணைக்களத்தில் ரூபா 2,310,000 தொகையை வைப்புச் செய்திருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வாய்மொழிமூல விசாரணைக்கு பதிலளித்த திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், தவறுதலாக திணைக்களத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவித்தார். எனவே, அந்தத் தொகையிலிருந்து ரூபா 1,800,000 தொகையை திறைசேரிக்கு மீளளிப்பு செய்யுமாறும் ரூபா 510,000 தொகையை திணைக்களத்தின் கட்டுநிதிப் பெறுவனவுகளாக தக்கவைக்குமாறும் அவர் அறிவுறுத்தியிருந்தார். | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திறைசேரி அச்சீட்டுத்தாள் எஸ்ஏ 52 இன் பிரகாரம் முற்பணக் கணக்கு பெறுவனவுகள் ரூபா 1,264,415 தொகையாக காணப்பட்ட போதிலும் இது ரூபா 869,105 ஆக குறிப்பிடப்பட்டுள்ளதால் நிதி செயலாற்றல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் ரூபா 395,310 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | திணைக்களம் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தைப் பயன்படுத்தாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான பரீட்சை மீதியை அது கொண்டிருக்காததால் ரூபா 395,310 முற்பணக் கணக்கு பெறுவனவுகள் வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு, அந்த உரையாடலின் போது பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) | திறைசேரி அச்சீட்டுத்தாள் எஸ்ஏ 70 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் கட்டுநிதிப் பெறுவனவுகள் ரூபா 18,348,430 தொகையாக இருந்த போதிலும் இது ரூபா 16,548,430 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததால் ரூபா 1,800,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் 2022.05.05 இல் திணைக்களத்தில் ரூபா 2,310,000 தொகையை வைப்புச் செய்திருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வாய்மொழிமூல விசாரணைக்கு பதிலளித்த திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், தவறுதலாக திணைக்களத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவித்தார். எனவே, அந்தத் தொகையிலிருந்து ரூபா 1,800,000 தொகையை திறைசேரிக்கு மீளளிப்பு செய்யுமாறும் ரூபா 510,000 தொகையை திணைக்களத்தின் கட்டுநிதிப் பெறுவனவுகளாக தக்கவைக்குமாறும் அவர் அறிவுறுத்தியிருந்தார். | இது வாய்மொழி அறிவுறுத்தல்களில் இல்லை, சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

**(ஆ) முற்பணக் கணக்கு மீதிகள்**

ஆண்டின் இறுதியில் உள்ளவாறான முற்பணக் கணக்கு மீதிகளிற்கான கணக்கீட்டின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சீட்டுத்தாள் எஸ்ஏ 52 இன் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவு ரூபா 1,721,409 ஆக இருந்த போதிலும் இது நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவின் கீழ் ரூபா | திணைக்களம் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தைப் பயன்படுத்தாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான பரீட்சை மீதியை அது கொண்டிருக்காததால் ரூபா 395,310 | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை உள்ளடக்குவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| 2,116,719 ஆக குறிப்பிடப்பட்டுள்ளதால் இது ரூபா 395,310 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | முற்பணக் கணக்கு பெறுவனவுகள் நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவின் கீழ் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு, அந்த உரையாடலின் போது பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. | எடுக்கப்பட வேண்டும். |

**(இ) கட்டுநிதி மீதி**

பின்வரும் கட்டுநிதி மீதிகளைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாகிய ரூபா 1,827,015 காசுப்பாய்ச்சலில் நிதி செலவினத்தின் கீழ் திறைசேரிக்கு கட்டுநிதி தீர்ப்பனவு செய்யப்பட்ட போதிலும் அது ரூபா 27,015 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததால் ரூபா 1,800,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் 2022.05.05 இல் திணைக்களத்தில் ரூபா 2,310,000 தொகையை வைப்புச் செய்திருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வாய்மொழிமூல விசாரணைக்கு பதிலளித்த திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், தவறுதலாக திணைக்களத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவித்தார். எனவே, அந்தத் தொகையிலிருந்து ரூபா 1,800,000 தொகையை திறைசேரிக்கு மீளளிப்பு செய்யுமாறும் ரூபா 510,000 தொகையை திணைக்களத்தின் கட்டுநிதிப் பெறுவனவுகளாக தக்கவைக்குமாறும் அவர் அறிவுறுத்தியிருந்தார். | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை உள்ளடக்குவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | ஏனைய தலைப்புக்களால் முற்பண "பீ" கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகள் திறைசேரி அச்சீட்டுத்தாள் எஸ்ஏ 51 இன் பிரகாரம் ரூபா 1,264,415 தொகையாக காணப்பட்டதுடன் இது ரூபா 869,105 ஆக கட்டுநிதி இணக்கக்கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்ததால் ரூபா | திணைக்களம் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தைப் பயன்படுத்தாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான பரீட்சை மீதியை அது கொண்டிருக்காததால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் எழுந்துள்ள சிக்கல்களுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை உள்ளடக்குவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 395,310 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளரை தொடர்புகொள்ளப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நிதிக்கூற்றுக்கள் அந்த தொடர்புகொள்ளலின் போது பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டன. அந்த வகையில் பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் இந்த முற்பண தவணைகள் ஏனைய தலைப்புக்களிலிருந்து முற்பண ''பீ'' கணக்கிற்கு மாற்றப்பட்டதன் கீழ் கட்டுநிதி இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (iii) | ஏனைய தலைப்புக்களால் முற்பண "பீ" கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவுகள் திறைசேரி அச்சீட்டுத்தாள் எஸ்ஏ 51 இன் பிரகாரம் ரூபா 192,944 தொகையாக காணப்பட்ட போதிலும் இது ரூபா 588,254 ஆக கட்டுநிதி இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்ததால் ரூபா 395,310 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | திணைக்களம் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தைப் பயன்படுத்தாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான பரீட்சை மீதியை அது கொண்டிருக்காததால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் எழுந்துள்ள சிக்கல்களுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளரை தொடர்புகொள்ளப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நிதிக்கூற்றுக்கள் அந்த தொடர்புகொள்ளலின் போது பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டன. அந்த வகையில் பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் இந்த முற்பண தவணைகள் ஏனைய தலைப்புக்களிலிருந்து முற்பண ''பீ'' கணக்கிற்கு மாற்றப்பட்டதன் கீழ் கட்டுநிதி இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை உள்ளடக்குவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் பின்வரும் சில ஆவணங்கள் பேணப்பட்டிருக்காத அதேநேரம் ஏனைய சில ஆவணங்கள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்காதமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **நட்டங்கள் தொடர்பான பதிவேடு**<br><br>நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் காலப்பகுதியில் நட்டமோ அல்லது சேதமோ அறிக்கையிடப்படாததால், அந்தப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் சேதம் ஏற்படாத பட்சத்தில், சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 110 இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு அதன் கீழ் கொடுக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் பொருளாதாரம் மற்றும் வினைத்திறன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 04 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 01 மூலதன செலவின விடயங்களில் ரூபா 662,509 கூட்டுமொத்த தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் இது மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 69 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. | கொவிட் தொற்றுநோய்க்காக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக நிறுவனங்கள் மூடப்படுதல், போராட்டம் மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக சேவைக்கு அறிக்கையிடுவதில் நேர அட்டவணையை பின்பற்றுதல், வரவு செலவுத் திட்டத்தில் இருந்து பெறப்பட்ட ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாமை மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் ஒதுக்கீடு காணப்பட்ட போதிலும் அவற்றிடமிருந்து நிதியேற்பாடுகள் பெறப்படாமை என்பன மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களின் நிதியேற்பாடுகளில் 69 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை சேமிப்புக்களிற்கு பங்களித்திருந்தது. | பொருளாதாரத்தை கருத்தில் கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக 2022 திசெம்பர் 30 இல் தலைவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 140,000 படி செலவின விடய இல. 1003 - ஏனைய படிகளின் கீழ் குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக செலவின விடயம் 1001 - சம்பளம் மற்றும் கூலிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | செலவின விடய இல. 1003 இல் உள்ள நிதியேற்பாடுகள் தலைவரின் படிகளைச் செலுத்துவதற்கு போதுமானதாக இல்லாததாலும், செலவின விடய இல. 1001 இல் போதுமான நிதியேற்பாடுகள் இருந்ததாலும், குறித்த இரண்டு மாதங்களுக்கான தலைவரின் படி செலவின விடய இல. 1001 இல் இருந்து செலுத்தப்பட்டது. | நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆளணி வேதனங்கள் மற்றும் படிகள் தவிர ஏனைய கொடுப்பனவுகள் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் ரூபா 18,945 மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. | அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவின விடய இல. 1402 இன் கீழ் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் பதிவேட்டில் ரூபா 797 பெறுமதியான பொறுப்புக்கள் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன. | பொறுப்புக்கள் பதிவேட்டில் மொபிடெல் லிமிட்டட் தொடர்பான விலைப்பட்டியல்களை உள்ளிடுவதில் ரூபா 797 வேறுபாடு ஏற்பட்டிருந்ததென தெரிவிக்கப்பட்டது. | பொறுப்புக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

### 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படும் சான்றுபடுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தில் உள்ள நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் அம் முறைமையினை செயற்திறனாக | இந்த திணைக்களத்தின் கணக்காய்வு நீதி அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டதென தெரிவிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் குழுவினால் நடாத்தப்பட்ட மீளாய்வின் போது செயற்திறனான நிதிக் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். மேலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தும் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்பாட்டு முறைமையுடன் கூடிய பொது நிறுவனங்களுக்கிடையில் இந்தத் திணைக்களம் தெரிவுசெய்யப்பட்டதுடன், அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் அவ்வாறான மீளாய்வை மேற்கொள்ளாதது அந்த நிலைமைக்கு காரணமாக இருக்கலாம். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| **அவதானிப்புக்கள்** | | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **தொகை ரூபா** | **இணங்காமை** | | |
| (i) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணகள் நி.பி. 135 | | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நிதி அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது திணைக்களத்தில் காணப்படாத பதவிகளுக்கு அத்தகைய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. | மேற்படி குறைபாடுகள் திணைக்களத்தால் அவதானிக்கப்பட்டதுடன் அதிகார கையளிப்பு 2023 நி.பி. 135 மூலம் திருத்தப்பட்டது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | அரச நிதிச் சுற்றறிக்கை 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7 ஆம் பிரிவு | திணைக்களத்தின் சில உத்தியோகத்தர்கள் சுற்றறிக்கைக்கு இணங்க சம்பளத்தாள்களில் கையொப்பமிட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சம்பளத்தாள்களில் கையொப்பமிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | சம்பளத் தாள்களில் கையொப்பமிடப்பட வேண்டும். |

## 2.5 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துதல்

வங்கிக் கணக்குகளைக் கையாள்வது தொடர்பான கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் புத்தகத்தின் பிரகாரம் மீதி பூச்சியமாக இருந்த போதிலும், வங்கி கணக்கிணக்க கூற்றினை தயாரிக்கும் போது அத்திகதியில் உள்ளவாறான காசுப் புத்தகத்தின் பிரகாரம் மீதி ரூபா 27,015 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. | காசுப் புத்தகத்தில் சிறுசெலவுக் காசின் அனைத்து சேமிப்புக்களையும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவு வைத்து திசெம்பர் 31 இல் திணைக்கள வைப்புக் கணக்கில் வைப்புச் செய்வது பல ஆண்டுகளாக திணைக்களத்தால் பின்பற்றப்படும் வழக்கமான நடைமுறையாகும். அதன் பிரகாரம், பணமாக்கப்படாத காசோலைகளின் பெறுமதியைக் கழித்த பின்னர் திணைக்கள கணக்கில் பயன்படுத்தப்படாத பணம் திறைசேரிக்கு மீளளிக்கப்பட்டு புதிய ஆண்டின் சனவரி 01 இல் வங்கியில் இருந்து வரவுக் குறிப்பொன்று பெறப்படும். எந்தவொரு நிதியாண்டின் இறுதியிலும் உள்ளவாறான திணைக்களத்தின் பயன்படுத்தப்படாத நிதியேற்பாடுகள் தொடர்புடைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களக் கணக்கில் இருப்பதால் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசுப் புத்தகத்தை பூச்சியமாகக் காட்டுவது நம்பத்தக்கதாக இருக்கவில்லை. அதன் பிரகாரம் கணக்கில் காணப்படும் மீதி குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இந்த நடைமுறை பல ஆண்டுகளாக பின்பற்றப்படுகிறது. | சரியான மீதிகளை உள்ளடக்கி கணக்கிணக்கக் கூற்றுக்களை தயாரிப்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பீஓசீ கணக்கு தொடர்பான வங்கி கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 663,779 ஆக இருந்த போதிலும், அது ரூபா 666,779 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததால் வங்கி கணக்கிணக்கக் கூற்றில் ரூபா 3,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | திணைக்களம் தொடர்பான வங்கிக் கணக்கிலிருந்து பணம் மீளப்பெறப்படும் சந்தர்ப்பத்தில் வங்கி ரூபா .3,000 ஐ பிடித்துவைத்திருக்கின்றதெனவும், அந்தத் தொகை இந்த வங்கிக் கூற்றின் இறுதி மீதியில் சேர்க்கப்பட்டு திருத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து அமுல்ப்படுத்துவதில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமானது செயற்பாடுகளை சரியாகக் கண்டறிந்து தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயற்பாடுகள் சரியாக இனங்காணப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆகஸ்ட் 25 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் (அரசாங்க செலவின மதிப்பாய்வு) பிரகாரம் கொள்வனவுகளை இடைநிறுத்துவதற்கு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் NISACO கம்பனியிடமிருந்து ரூபா 43,257 பெறுமதியான புத்தக இறாக்கை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 0.40 மில்லியன் தொகை | அரசாங்க திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர், அந்தக் காலப்பகுதியில் மூலதனச் செலவினங்களுக்கு நிதிகளை வழங்க முடியாது எனவும், கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் கேள்விகளை கோருதல் போன்றவற்றை மேற்கொள்வது நடைமுறையில் கடினமானது எனவும் வாய்மொழிமூலம் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, செயல்நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றம் சரியாகக் கணிப்பிடப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 43,257 இற்கு மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்ட நிலையில், 87 சதவீத முன்னேற்றம், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றமாக நிதி செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இது கணக்காய்வின் போது கேள்விக்குரியதாக இருந்தது. | அறிவித்திருந்தார். அந்த காலாண்டிற்காக ரூபா 50,000 நிதியேற்பாடு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதுடன் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் பொருட்களின் தீவிர விலை அதிகரிப்பு காரணமாக அந்த நிதியேற்பாட்டின் வரம்பிற்குள் புத்தக இறாக்கை நூலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டது. |

### 3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டம் அடைந்துகொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1969 இன் 03 ஆம் இலக்க சட்ட ஆணைக்குழு சட்டத்தின் முக்கிய நோக்கமானது, சட்டத்தின் சீர்திருத்தத்தை ஊக்குவிப்பதாக இருக்க வேண்டியதுடன் அந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு 11 நடவடிக்கைகள் இனங்காணப்பட்டுள்ளன. எனினும், 2022 சனவரி 01 முதல் 2022 திசெம்பர் 31 வரை 04 சட்டப் பரிந்துரைகளுக்காக 06 கூட்ட அமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன, மேலும் கலந்துரையாடல்கள் முடிவடைந்த அறிக்கைகளின் எண்ணிக்கை 01 மாத்திரமேயாகும். எனினும், தலைவர் உள்ளடங்கிய ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட படிகளின் பெறுமதி ரூபா 932,000 ஆக இருந்ததுடன் அதற்கிணங்க ஒரு கூட்ட அமர்வுக்கு ஏற்பட்ட சராசரி செலவினம் ரூபா 155,333 ஆகும். | சட்ட ஆணைக்குழுவின் செயலாற்றலை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து திணைக்களத் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நீதி அமைச்சின் செயலாளர் 2021.09.22 ஆம் திகதிய எம்ஓஜே/ஐஏ/03/05(I)2021 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் தலைவருக்கு விளக்கமளித்திருந்ததென அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் தலைவர் 2023.03.14 இல் பதவி விலகினதன் அடிப்படையில் புதிய தலைவர் நியமிக்கப்படும் வரை சட்ட ஆய்வுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. | நிர்வாகப் பிரச்சனையை விரைவாக தீர்த்து பிரதான நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல் 14 இல் கொடுக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல் 14 இல் கொடுக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் மீளாய்வாண்டின் வருடாந்த கணக்குகளுடன் சேர்த்து வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் வரைவு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையில் உள்ள விடயங்கள் தொடர்பில் இணக்கம் காணப்பட்டு எதிர்காலத்தில் அது நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அரசாங்கக் கணக்கு தொடர்பாக உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுத்தும் அல்லது காசோலைகளில் கையொப்பமிடும் உத்தியோகத்தர்கள் பிணை வழங்க வேண்டிய போதிலும் திணைக்களத்தின் காசோலைகளில் கையொப்பமிடும் இரண்டு பதவியணி உத்தியோகத்தர்கள் அவ்வாறு பிணைகளிற்கான பணத்தை வைப்புச் செய்திருக்கவில்லை. | நி.பி. 880 மற்றும் நீதி அமைச்சின் 2011.01.11 ஆம் திகதிய 01/2011 ஆம் இலக்க மற்றும் 2014.05.07 ஆம் திகதிய 01/2011(i) ஆம் இலக்க சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் பிணைகளை வழங்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பில் பிணைகளை வைப்புச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் உதவிச் செயலாளர் பதவியை வகிக்கும் இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரமே பிணைகளை வைப்புச் செய்திருக்கவில்லை. பிணைகளை வைப்பிலிடுவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்த பின்னர், திணைக்களம் 2016.09.20 ஆம் திகதிய எஸ்எம்/05/2016 ஆம் இலக்க கடிதம் மூலம் தேவையான ஆவணங்களை நீதி அமைச்சுக்கு அனுப்பியிருந்ததுடன், தேவையான நடவடிக்கைகளுக்காக நீதி அமைச்சு அவற்றை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அனைத்து நட்டங்கள் தொடர்பான பதிவுகளை பேணுவதற்கு நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் 2019 நவம்பர் 04 வரை வாகனங்களால் ஏற்பட்ட நட்டங்கள் மாத்திரமே 2015 ஆம் ஆண்டு முதல் பேணப்படும் நட்டங்கள் தொடர்பான பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. | இந்தக் காலப்பகுதியில் நட்டமோ அல்லது சேதமோ அறிக்கையிடப்படாததால், அந்தப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் சேதம் ஏற்படாத பட்சத்தில், சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 11 ஆம் திகதிய 03/2021 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் பொது நிறுவனங்களின் தொலைபேசி கிரயத்தை 25 சதவீதத்தாலும், மின்சார கிரயத்தை 10 சதவீதத்தாலும் குறைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட வேண்டிய போதிலும் அத்தகைய ஒழுங்கு எதுவும் செய்யப்படவில்லை. | பதிற்கடமை அடிப்படையில் பணிபுரியும் உத்தியோகத்தர், பதிற்கடமை பதவிக்கு உரிய படிக்கு அவர் உரித்துள்ளவராக இருந்த போதிலும் அதனை பெறவில்லையெனவும், தனது நிரந்தரப் பதவிக்கான உரித்தை மாத்திரமே பெற்றுக்கொண்டார் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. செலவின வரம்பு தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையாக, சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 02 குழாம் வாகனங்களுக்குப் பதிலாக, ஒரு குழாம் வாகனத்தில் போக்குவரத்து வசதிகளை மூன்று பதவியணி தர உத்தியோகத்தர்கள் பெற்றனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) 2021 ஆம் ஆண்டு பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டு ஏலமிடுவதற்கு பட்டியலிடப்பட்ட வாகன உதிரிப்பாகங்களை ஏலமிடுவதற்கு 2022 திசெம்பர் 31 வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் 2023.04.04 இல் ஏலமிடப்பட்டு அகற்றப்பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | இனங்காணப்பட்ட வாகன உதிரிப்பாகங்களை ஏலமிடுவதற்கும், கணக்குகளில் இருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும் குறைந்தபட்சம் நீதி அமைச்சினால் 2022 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நீதி அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவானது திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வை மேற்கொள்கின்றதெனவும் 2021 இல் கொவிட் தொற்றுநோய் பரவியமை அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் உள்ளக கணக்காய்வை மேற்கொள்ளாததற்கு காரணமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளக கணக்காய்வை நடாத்துவது திணைக்களத்தின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட பணியாகும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு நடாத்தப்பட வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு திணைக்களத்தின் முழு பதவியணியினரிற்குமான வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சமர்ப்பிக்கப்படும் அவதானிப்புகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 29 ஆக இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் 12 ஆகும், இதில் சிரேஷ்ட நிலையின் 03 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையின் 07 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையின் 02 வெற்றிடங்கள் என்பன உள்ளடங்குகின்றது. | செயலாளர் பதவியின் முழுநேரக் கடமையை பதில் செயலாளர் மேற்கொண்டு வருவதாகவும், 2022.02.02 இற்குப் பின்னர் பதவி உயர்வுகள் கிடைத்தவுடன், பிரதிச் செயலாளர் பதவி வெற்றிடம் நிரப்பப்படும் என்றும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் முழுமையாக நிரப்பப்படும் என்றும், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தற்போதைக்கு போதுமானதாக இருந்துடன் சாரதி பதவி வெற்றிடத்திற்கு பல்நோக்கு திணைக்களத்தில் பயிற்சி பெற்ற சாரதி ஒருவர் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு பதவிக்கான பதிற்கடமை நியமனமொன்று உண்மையான நியமனம் செய்யப்படும் வரை தற்காலிக நடவடிக்கையாக மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக இருந்த செயலாளர் பதவிக்கு நிரந்தர நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த திணைக்களத்தின் செயலாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு நீதி அமைச்சு முயற்சித்த போதிலும் இந்த பதவிக்கு தேவையான தொழில் தகைமைகள் மற்றும் தொழிலில் தேவையான சேவை காலத்தை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காததால் இந்த வெற்றிடத்தை நிரப்ப முடியவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தேவையான தொழில் தகைமைகளை உடையவர்கள் மற்றும் சேவை அனுபவத்திற்கு தேவையான வருடங்களை பூர்த்தி செய்தவர்கள் இப்பதவிக்கு பொருந்தும் சம்பள அளவுத்திட்டத்தின் காரணமாக இப்பதவிக்கு விண்ணப்பிக்காததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |